## ரிதீகம பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரிதீகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான 05 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 30,645,320 இற்கான சம்பள மீளளிப்பு தொகையினை குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை இனங் கண்டு கணக்கீடு செய்யப்படாமல் பொதுவான நிருவாக நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆண்டிற்காக 04 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட ரூபா 211,142 இற்கான முற்கொடுப்பனவின் கீழ் பதியப்படாமல் ஆண்டிற்ாகன செலவுகள் எனக் கணிக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்திருந்த ரூபா 6,500,000 இற்கான உதவி நிதி மீண்டுவரும் வருமானத்தின் கீழ் மற்றும் அதனொடு தொடர்புடைய செலவுகளை மூலதன செலவுகளின் கீழ் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 282,900 இற்கான புத்தக பெறுமதியுடைய கை டிரக்டர் வண்டி ஒன்றினை ஏலவிற்பனவு மூலம் கிடைத்திருந்த ரூபா 148,000 தொகை, மூலதன வருமானத்தின் கீழ் எடுத்திருக்கவில்லை. அதே போல மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கில் இருந்து சொத்துக்களின் பெறுமதியை அகற்றியிருக்கவில்லை.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

-----------------------------------------

சபையில் சேவையாற்றிய பின்னர் ஓய்வு பெற்றிருந்த உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை மீதி ரூபா 3,110,066 ஆக காணப்பட்டது.

1.3.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

--------------------------------------------------------------

நிதி தொடர்பாக கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 609,063 தொகை எனினும் திரண்ட நிதியத்தில் அத்தொகை ரூபா 323,463 என எடுக்கப்பட்டிருந்தமையால் ரூபா 285,600 இற்கான விளக்கமளிக்கப்படாத வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 111,999,602 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 34% என ரூபா 38,243,353 தொகை ஒன்று 3 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) அறவிடக்கூடிய துணைச் சேவைகளின் கீழ் ஜாதிக சவிய கம நெகும, மாகாண முதலீடுகள், மாகாண குறிப்பிடப்பட்ட, பெருந் தெருக்கள் அபிவிருத்தி அமைச்சு உதவிகள் போன்ற மூலங்களின் கீழ் 3 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 1,347,186 இற்கான மீதிகள் காணப்பட்டன.

(இ) வருமானக் கடன்பட்டோர் மீதியில் தொடர்ச்சியாக காட்டப்பட்டுவரும் குறிப்பாக இனங்காணப்படாத ரூபா 35,023,292 இற்கான மீதியொன்று காணப்பட்டது.

(ஈ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 25 சந்தர்ப்பங்கள் தொடர்பாக காலங் கடந்த வைப்புக்களின் மீதி ரூபா 426,774 ஆகும்.

(உ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 65,087,737 ஆகும். அவற்றில் மொத்தமாக 3% வீதம் என ரூபா 2,010,312 தொகை ஒன்று 3 வருடங்களை விட மிகைத்து காலம் முதல் காணப்படும் மீதிகளாகும். இவற்றில் நீண்ட காலமாக காணப்படும் இயந்திரங்கள் வழங்கள் கடன் கொடுத்தோர் என ரூபா 96,262 இற்கான மீதியொன்றும் காணப்பட்டது.

2. நிதி செயலாற்றுகை

--------------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடு மிகை ரூபா 6,564,066 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரோப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,711,199 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 1,147,193 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவுகளுக்கு ரூபா 57,710,091 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 64,883,160 இற்கான மூலதனச் செலவுகளை சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 609,063 இற்கான பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 59,791,796 தொகையில் மொத்தமாக 77% தொகை என ரூபா 46,025,320 உம் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 57,710,091 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 53,227,790 தொகையில் மொத்தமாக 60% என ரூபா 32,159,313 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் மொத்தமாக 95% என ரூபா 30,645,320 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்று வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதனச் செலவு ஆகிய ரூபா 64,883,160 தொகையில் மொத்தமாக சுமார் 3% ஆகிய ரூபா 1,661,500 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியான 97% ஆகிய ரூபா 63,021,660 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடங்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வீதவரி

-----------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 2,758,504 ஆக காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்பட்டவை ரூபா 1,812,851 ஆகும். 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 – 42 வரை விதிகளின் பிரகாரம் நிலுவை அட்டவணை தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் ஆதனங்களை தடை செய்து நிலுவை வீத வரியினை அறவீடு செய்யும் செயற்பாடு பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

2.3.2 வாடகை

-------------

2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது சபையினால் வாடகைக்கு கொடுத்திருந்த 04 சொத்துக்கள் தொடர்பாக ரூபா 179,359 இற்கான நிலுவை தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,250,000 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,658,815 தொகையும் ஆகும். இந்த நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக ரூபா 1,550,000 வரையும் முத்திரைக் கட்டணம் தொடர்பாக ரூபா 8,958,815 வரையும் 2015 ஜூலை அளவில் குறைவடைந்திருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------

புத்தகப் பெறுமதி ரூபா 825,000 இற்கான 02 கட்டிடங்கள் பல வருட காலமாக காணப்பட்டதுடன் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கு அல்லது வேறு பொருத்தமான செயற்பாடு ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

இலக்கம் JO – 1004 கொண்ட JCB இயந்திரம் 2013 ஆண்டு முதல் செயற்படாமல் காணப்பட்டமையால் அதற்காக நியமனம் பெற்றிருந்த சாரதியினால் முறையான சேவை ஒன்றினை பெறமுடியாதிருந்தத போதிலும் ஊழியர் சம்பளமாக ரூபா 477,377 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனக் கட்டுப்பாடு